# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2027 (தாது ஆண்டு) ஆனி - ஆடித் திங்க



ஆலங்காயம் — பாறை ஓவியங்கள்

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம்

காலாண்டிதழ் - 47 (1996, ஜுலைத் திங்கள்) விலை ரு 1-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே . . .


1. கோடியக்காடு செப்பேடு
— நடன. காசிநாதன் ... 1

2. சோழர்காலத் தூண் கல்வெட்டு
— கி. ஸ்ரீதரன் ... 9

3. முத்தூர் குலோத்துங்க சோழீஸ்வரர் கோயில்
— இரா. ப. கருணானந்தன் ... 11

4. சேதுபதி காசுகள்
— நாக. கணேசன் ... 16

5. கட்டபொம்மன் வழங்கிய செப்பேடு
— ச. கிருஷ்ணமூர்த்தி ... 21

6. சிரியக்கி பழஞ்சலாகை
— டாக்டர் ஆர். ரங்கராஜ் ... 27

7. ஆலங்காயத்தில் அரிய பாறை ஓவியங்கள்
— ஆர். வசந்தகல்யாணி ... 31

8. கடலில் கிடைத்த புத்தர் சிற்பம்
— கா. நெடுஞ்செழியன் .. 35

9. கண்டன்விளை கல்லறைக் கல்வெட்டு
— தே. கோபாலன் ... 36

# கோடியக்காடு செப்பேடு

திரு. நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

நாகை காயிதேமில்லத் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் கோடியக்காட்டைச் சேர்ந்த திரு. டி. ஆர். ஆர். வி. சாமி என்ற திரு. வேதநாயகம் முதலியார் அவர்களிடம் உள்ள செப்பேடு தொல்பொருள் ஆய்வுத்துறை தஞ்சாவூர் இளநிலைப் பொறியாளர் திரு. ஆர். நாராயணன் மூலம் அறியப்பட்டது. இவர் குடும்பத்தில் இச்செப்பேட்டுடன் ஒரு போர் வாளும் உள்ளதாக திரு. வேதநாயக முதலியார் தெரிவித்துள்ளார்.

20 செ.மீ. நீளம் 33 செ.மீ. அகலம் அளவுள்ள இச்செப்பேட்டில் முன்பக்கம் 46 வரிகளும், பின்பக்கம் 39 வரிகளும் எழுதப் பட்டுள்ளன.

இச்செப்பேடு கடற்கரையில் உள்ள நிலக்கொடை பற்றியது என்பதனால் இதனில் தீவுகள், உப்பளங்கள், சேது சாலை, சேது மடம், கோடீஸ்வரர், ராமர் பாதக் கோயில் முதலியவை குறிப்பிடப்பட்டு காணப்படுகின்றன.

**காலம்**

இச்செப்பேட்டின் எழுத்தமைதி கி.பி. 18-ஆம் நூற்றாண்டின தாகக் கருதலாம். இதனில் சகாப்தம் 1208 (கி.பி. 1286) கலி ஆண்டு 4374 (கி.பி. 1273) ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. இவை ஒன்றோடு ஒன்று பொருந்தவில்லை. மேலும் இதனில் குறிக்கப் படும் தமிழ் ஆண்டு 'ஜய' 13-ஆம் நூற்றாண்டில் கி.பி. 1234 மற்றும் கி.பி. 1294-ல் வருகிறது எனவே இதில் குறிக்கப்பட்டுள்ள காலக்குறிப்புகள் சரியானவையாகக் கொள்ள இயலாது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் 'ஜய' வருடம் 1714 மற்றும் 1774 ஆகிய ஆண்டுகளில் வருகிறது. இவ்வாண்டுகளில் ஒன்றில் இச்செப்பேடு வெளியிடப்பட்டது என்று கருதலாம்.

செய்தி

ஆதிசேதுமடத்து முதலிகள், மாகேசுவரர், கோயிலார், அரசினர் (ராசகரம்) அஞ்சு தேசத்து பரிகலசனங்கள் ஆகியோர் கோடீஸ்வர சுவாமி கோயில் தீர்த்த மண்டபத்தில் கூடி எடுத்த முடிவாக இச்செய்தி அமைகிறது. இந்த முடிவு கொழககோயில் ஆதிசண்டேசுவரர் பெயரில் திருமுகப்பட்டையமாக வழங்கப் பட்டுள்ளது.

திருக்காளஹஸ்தியைச் சேர்ந்தவரும் சைவ சிகாமணியும் கௌதம கோத்திரத்தைச் சேர்ந்தவருமான வயிரவ நம்பியார் பிள்ளை பொன்னம்பியாருக்குத் திருவாசி என்ற கிராமமும் திருக்கோடீசுவரர் கொழக கோயில் பூசைக்காணியும் அக்கோயில் தேவகர்மப் பணியும் தரப்பட்டுள்ளன. முன்பு திருக்காமிநம்பி என்பவர் இவற்றை ஆண்டு அனுபவித்தவண்ணப் இவருக்கும் தரப்பட்டது.

திருக்காமிநம்பி மூன்று வட்டமுறைப்படி பூசைக்காணியாய்க் கொண்டிருந்தனவற்றைக் கொடுத்தபடியால் அந்த பூசை உரிமையில்

1. கோயிலை ஒட்டிய நிலங்கள், தீவு, திட்டுகள்;
2. காற்புவன ஆலையம், சேதுசாலை, காந்தானோடை அஞ்சதாட்சி பிள்ளை திடல், அய்யனார் கோயில் தென் பகுதி ஆகியவற்றுக்கிடைப்பட்ட நிலம், தோப்பு, துரவு;
3. சிறுதலைக்காட்டுத்தீவு முதலான அளத்தி குள பல தீவுகள், சிராமன் தீவு, கொழகர் கட்டளை நிலம்; ஆகிய பகுதிகளிலிருந்து அரசின் பேரில் வரும் வரி 100 பொன் விழா(உற்சவம்)விற்கான பொன் 50 ஆக 150 பொன் வரியாகப் பெறும் உரிமை இருந்தது. இவையும் பொன் னம்பிக்குத் தரப்பட்டன.

இவற்றைக் கொண்டு இவர் பூசையையும் மற்றும் இக்கோயில் குடிகளான பணியாளர்களையும் (கொத்து) முன்பு போலவே நடத்தி வரவும் ஆணையிடப்பட்டது.

மேலும் இவருக்குக் குடியிருக்க மனையும், அத்தோடு அரசந்தி குளம் ஐந்து வேலி நிலமும் தரப்பட்டன. இவற்றைக் கொண்டு இவர் பூசை நடத்தவும் கோயில் பூசைக்கு வேண்டிய மலர்கள், கும்பம் முதலான செலவுகளும் செய்யக் கடமைப்பட்டார்.

சீராமன் தீவைச் சேர்ந்த மூன்று வேலி நிலம் பெற்று அங்கு இராமபாதம் முதலிய கோயில்களில் பூசை செய்து அனுபவிக்கவும் உரிமை பெற்றார்.

இந்த ஆவணத்தில் கையொப்பமிட்டவர் பெயர்களும், அறிவேன் என்று சாட்சியொப்பமிட்டவர் பெயர்களும் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளன.

## கோடியக்காடு செப்பேடு

1. ஸ்வஸ்தி ஸ்ரீசாலிவாகன சகாப்புதம் 1208 கலியுகாத்தம் 4374 இதின்மேல் செல்ல
2. ா நிண்ட ஜயவூ வ்ருஷபமாகிய வையாசி மாதம் 18உ பூர்வபக்ஷத்து ஆதிவாரமும் த்ரி
3. தியெயும் ரேவதி நக்ஷத்திரமும் பெத்த புண்ணிய தினத்திலே ஸ்ரீராஜராஜேந்த்ர சே
4. ாஷராஜாகள் சுபஸ்ரீசக்ரவத்திகள் திருப்பணி கொண் டருளிய ஸ்வ
5. ஸ்திஸ்ரீ திருகோடீச்வரக் கோழக கோவில் ஆதிசண்டே சுர
6. தேவர் திருவாயி மலருதருளிட்ட செயிதபடித் திரு ஆதி சேது
7. மடத்து முதலிகளும் மாகேசுரரும் தானத்தாரும் ராசகர
8. மும் அஞ்சு தேசத்து பரிகலசெனங்களும் நிறைவற நினந்து கு

9. றைவகக் கூடி ஆதிசேது கோடீசுரசுவாமி சன்னி
10. தியில் தீற்த்த மண்டபத்திலேக் கூடி இருந்து
11. திருவாசி கிறாமம் சையிவரில் அளித்த திருக்காள
12. ஹஸ்தி ஊர்உடைய சைவாராயார் சைவேந்
13. திர சைவ சிகாமணி ஆகிய ஸூத்ரர் அதிகா
14. ரி கெவுதம கோத்திரர் ஆகிய வயிரவதம்பி
15. யார் பிள்ளை பொன்னம்பியாருக்கு
16. உதகதான பூர்வமாக பண்ணிக்குடு
17. த்த திருவாசிக் கிறாம்மத்துக்கு திருமுகப்ப
18. ட்டையம் தாங்களித்து தாங்கள் இதுவ‌ை
19. ரயும் தரணிமுழுதுடைய உம்பவளனா
20. [ட்டு] குண்ணூர் னாட்டு சுவாமி[ய]ார் திருக்கோடி
21. டீசுரன் கொழககோவிலுடைய னாயனார்
22. கோவிலில் எங்களிதான பூசைக் காணியு
23. ம் தேவதான தேவகற்மமும் தங்களுக்குக் கட்டளை
24. யிட்டபடியினாலேத் திருக்காமிநம்பி முன்னாண்
25. ட படிக்கி ராட்டகேசடந்த மூனுவட்டத்து பூசை காணிய்
26. யி தமக்கு தானபூறுவமாக குடுத்தபடியினாலே கொத்து
27. க்கு நடந்து வரும்படி ஆலையத்துக்கு மேற்க்கு னாற் கெ(ா)ல்
28. லைக்கு உள்ப்பட்ட நிலமும் தீவுதிட்டுக்களும் கொ
29. ழக கோவிலுக்கு காற்புவனத்தில் ஆலையத்துகு தெ
30. க்கு சேதுசாலைக்கு மேற்க்கு காத்தானோடை வய்க்கா

31. லுக்கு வடகு மேற்க்கு அஞ்சதாட்சி பெண்பிள்ளை

32. திடலுக்கு கெழக்கு வடக்கு அய்யனார் கோவில் சன்ன

33. திக்கு தெக்கு னாங்கெல்லைக்கு உள்ப்பட்ட நிலமும்

34. தோப்பு துரவும் இதின் மேற்க்கு சிறுதலைக்காட்டுத் தீவும்

35. முதலாகிய அளத்தி குள பலதீவும் இதின் கிழக்கு சீராம

36. ன் தீவும் இதின் வடக்கு கொழகர்கட்டளை நிலமும் தே

37. ராட்டத்துரவும் இந்தக் கிறாமங்களில் உள்பட்ட நஞ்சை

38. ச பிஞ்சை நிலமும் தோட்ட தொரவும் அரமனை ரொ

39. க்க மோகினி னூறு பொன்னும் உச்சவ மோகின்

40. னி அன்பது பொன்னும் ஆகனூத்தன்பது பொன்

41. மோகினியும் நிலமோகினியும் தாமே அனுப

42. வித்துக் கொண்டு முன்னாள் னாங்கள் ஆண்டு நடத்

43. தி வந்தபடிக்கி கொ[ழ]வில்த்துறை சேதுராயர் முத

44. லியார் கணக்குபடிக்கு மோகினி திட்டம் நடப்

45. ப்பித்துக் கொண்டுக் கொத்துக் குண்டாகிய பரிகல

46. செனங்களையும் முன்னாட்படிக்கு நடப்பித்து கொ

## பின்பக்கம்

47. ண்டு இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணிக் கொண்டு சக்தி

48. றாதித்திய வரையும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு சுகத்தி

49. லே இருக்க கடவறாகவும் நம்பியாருக்கு மனை மான்யம் ராசகரமும்
50. நாங்களும் பண்ணிக் குடுத்தபடிக்கி காற்புவனமாகிய கொ
51. ழகர் கோவிலில் முன் திருக்காமி நம்பி மனை மாளிகையும் அ
52 ரசந்திக் கொளமும் ஆலை[ய]*த்துக்கு தெற்கு அஞ்சு வேலி நிலமும் சறுவ
53. மானியமும் அவ்மாணியத்துக்கு எல்லை ஆவன சன்னதி சாலைக்கு தெ
54. ற்கு கோனான்னோடைக்கு மேற்கு காத்தானோடை வடக்காலுக்கு வடக்கு சேது
55. சாலைக்கு கிழக்கு னாங்கெ(ா)ல்லைக்கு உள்ப்பட்ட நிலம் நஞ்சையி பிஞ்சையி நில
56. மும் மேல்நோக்கிய மரமும் கீனோக்கிய குளமும் அனுபவித்துக் கொண்
57. டு கோவில் பூசைக்கு கும்ப றெத்தினம் சொற்ன புழ்ப்பம் முதலான
58. சாறுவசுவந்திரமும் சம்வரிசி உண்டானது எட்டுலொரு பங்கும் சமயல்
59. அன்ன முதலான சகலதுக்கும் மூனுலொரு பங்கும் பத்திக் கொண்டு ஸ்வஸ்தி
60. ஸ்ரீ வுத்தமா பூறுமா [தமாரமடாதம்][1] பூசைக்கு மோகின ஆன நிலமானியம்
61. கமுக்கு சீராமன் தீவு னாங்கொல்லைகு உள்ப்பட்ட நிலம் வேலி ௩ இந்த மூனு
62. வேலி நிலமும் அனுபவிதுக் கொண்டு [இகஇ] காவிதம் ராமபாதத்துக்கு

---

1. உதகபூறுவ தர்மமடா பாதயம் ஆக இருக்கலாம்.

63. பூசை பண்ணிக்கொண்டு அதில் உண்டாகிய லாபங் களும் [ராமபாத]

64. தேவராகிய பலதெளிக் கோவில்களும் அதுகள் உண்டாகிய [லாபங்]

65. களும் அனுபவித்துக்கொண்டு புத்திர பவுத்திரா பார[ம்] பரியமாக சந்திராதி

66. த்தவரையும் செல்லச் சறுவமானியமாக அனுபவித்துக் கொண்டு இந்

67. த காணிய்யித்தனாகி வித்து ஒத்துவச்சும் ஆண்டு அனுபவித்து கொ

68. ள்ளக் கடவராகவும் பூசைக்கு லேகைப்படிக்கு உண்டானது திரு [முத

69. ல்] பத்திக் கொண்டு பூசை பண்ணி கொண்டு சுகத்தி லே இருக்க கடவ

70. ராகவும் இந்த திருமுகப்பட்டையத்துக்கு எழுத்துக் குத்தம் வாசகப் பி

71. ழை வரிம[ா]றாட்டம் வெட்டுச் செதுக்கு சொலப்பட்ட எக்குத்த

72. மும் குத்தமென்று சொல்லக் கடவதல்ல இந்த படிக்கி திருமுக

73. பட்டயம் எழுதி குடுத்தோம் பொன்னம்பியாருக்கு இந்த பட்ட

74. யத்துக்கு **ஹஸ்தலிகிதம்** இந்தபடிக்கி வயிரவ தம்பி வேளா

75. டியார் எழுத்து இந்தபடிக்கு பல்லவராயவுாடியார் இந்

76. த படிக்கி திருக்காமி நம்பி எழுத்து இந்த படிக்கி சிதம்பரனாத வே

77. லனா சித்தர் எழுத்து இந்தபடிக்கு கோவில் அதிகாரம் சேதுரா[ம] மு
78. தலியார் எழுத்து இந்தபடிக்கு கங்கணம் ஆறு முகத்தா முதலிய
79. ரார் எழுத்து இந்தபடிக்கி கோவில் கொத்து[1] சங்கர பிள்ளை
80. எழுத்து இந்தபடிக்கி அறிவோம் வேதவனம் பூசை
81. [பூ]சை சூரியமூர்த்தி நம்பியார் எழுத்து இந்த பட்ட
82. [ட]யம் எழுதினதிம்மைக்கு மேல்படி குழக கே
83. ரவில் சதாசிவர் கயில முதல் எழுத்து இந்த திருமு
84. க பட்டயம் எழுதி முகிந்தது முத்தும் கோடி
85. வினாயகன் துணை வ

---

1. 'கொத்து' என்பதிலிருந்து 'கொத்தடிமை' என்ற சொல் வழக்கில் வந்துவிட்டது போலும்.

திருச்சிராப்பள்ளி மத்தியப் பேருந்து நிலையம் அருகில் இருக்கும் தூய யோவான் வெஸ்ட்லி ஆங்கிலோ இந்தியன் மேனிலைப்பள்ளி வளாகத்தில் பாழடைந்த கிணறு ஒன்றில் பராமரிப்பு பணி செய்யும்பொழுது கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. இதனைக் கண்டறிந்த பள்ளியின் தமிழாசிரியர் புலவர் திரு ஆ. சுப்பிரமணியன் அவர்கள்

# சோழர்காலத் தூண் கல்வெட்டு


**கி. ஸ்ரீதரன்**

பதிவு அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை


தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் திருச்சிராப்பள்ளி பதிவு அலுலருக்குத் தெரிவித்தார். அத்தகவலின்படி மேற்படிக் கல்வெட்டு தொல்பொருள் ஆய்வுத்துறையால் படியெடுக்கப்பட்டது.

**கல்வெட்டின் வாசகம்**

1 ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமண்[ட]

2 ஞ் செய்வித்தாந் ரா[செ]

3 ந்திர சோழ வளநாட்டு வ[ண்]

4 [டா]ழை வேளூர் கூற்றத்து

5 [வே]ளூர் கிழவந் நாரந[நா]

6 ந காறை கற்பகம்

தூணின் சதுரமான மேற்பகுதியில் மட்டும் கல்வெட்டு உள்ளது. அதன் கீழ் ஆறு பட்டையுடனும், நடுப்பகுதி தாமரை வேலைப்பாட்டுடனும் காட்சியளிக்கிறது தூணின் கீழ்ப்பகுதி இல்லை. மண்டபச் சுவரில் வைத்துப் புதைத்து கட்டக் கூடிய வகையில் மேற்படித்தூண் அரைத்தூண் (Pilaster) வகையைச் சேர்ந்ததாகும்.

இராசேந்திர சோழ வளநாட்டைச் சேர்ந்த வண்டாழை வேளூர்க் கூற்றத்தைச் சேர்ந்த வேளூர்க் கிழவன் காறைக் கற்பகம் என்ற நாரணன் இத்திருமண்டபத்தைச் செய்தளித்திருக்கிறான் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

## வண்டாழை வேளூர்க் கூற்றம்

இராசேந்திர சோழ வளநாட்டில் ஒரு பகுதி வண்டாழை வேளூர்க் கூற்றம். தற்போதைய நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி நாகப்பட்டினம் வட்டங்கள் வண்டாழை வேளூர்க் கூற்றத்தில் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து மூன்றாம் இராசராசன் காலம் வரை கல்வெட்டுகளில் வண்டாழை வேளூர்க் கூற்றம் குறிக்கப்படுவதைக் காணலாம். மேலும் திருத்துறைப்பூண்டி வட்டக் கல்வெட்டுகளில்

1 வேளூர்க் கிழவன் அரையன் அழகிய திருச்சிற்றம் பலமுடையான் காரானை விழுப்பரையன்

2 வேளூர்க் கிழவன் அரையன் இருங்கோளன்

3 வேளூர்க் கிழவன் அரையன் குடிமுதலி

4 வேளூர்க் கிழவன் அரையன் ராஜராஜ தேவன்

5 வேளூர்க் கிழவன் அரையன் குலசேகர காரானை விழுப்பரையன்

6 வேளூர்க் கிழவன் அரையன் வேதவன நாயகன்

போன்றவர்கள் முக்கிய இடம் பெற்றுள்ளனர். திருச்சிக் கல்வெட்டில் குறிக்கப்படும் வேளூர்க் கிழவன் நாரணனான காறைக் கற்பகம் என்பவனும் இப்பகுதியில் முக்கியத்துவம் பெற்ற நிலையில் விளங்கியிருக்க வேண்டும். இவனால் இங்கு திருமண்டபம் ஒன்று கட்டப்பட்டு அது காலப்போக்கில் அழிந்து போயிருக்கலாம். திருத்துறைப்பூண்டிப் பகுதியைச் சேர்ந்த நாட்டுப்பிரிவைக் குறிக்கும் கல்வெட்டு திருச்சியில் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத் தூண் தற்பொழுது திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

★

# முத்தூர் குலோத்துங்க சோழீஸ்வரர் கோயில்

பெரியார் மாவட்டம், காங்கேயம் வட்டம் வெள்ளகோயிலுக்கு அருகிலுள்ள ஊர் முத்தூர். இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புடைய குலோத்துங்க சோழீஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் சுமார் எட்டுக் கல்வெட்டுகள் வரை கட்டுரை ஆசிரியரால் பார்வைப்படி எடுக்கப்பெற்றன.

முத்தூரில் உள்ள கல்வெட்டுகள் கொங்குச் சோழர்களாகிய குலோத்துங்கன்,[1] வீரராசேந்திரன்[2] முதலிய அரசர்களால் வெளியிடப் பெற்றவை. கோநேரின்மை கொண்டான் எனத் தொடங்கும் கல்வெட்டு ஒன்றும் உள்ளது.

கொங்கு நாட்டுப் பிரிவுகளுள், காங்கேய நாடு தனிச்சிறப்புப் பெற்றது. காங்கேய நாட்டைச் சார்ந்த வியாபாரிகள், கொங்கில் பல கொடைகளை அளித்துள்ளனர். அத்தகைய காங்கேய நாட்டில் முத்தூர் அமைந்துள்ளதாக கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கொங்கில் 'ஊர்' என்னும் முடிவினையுடைய ஊர்ப்பெயர்கள் சுமார் 100 வரை அறியப்பெற்றுள்ளன. ஊர் என்னும் முடிவை உடைய ஊர்கள் வெள்ளாளர்களின் குடியிருப்பு ஊர்கள் என்று சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி கூறுகிறது. பெரும்பழன நல்லூர் என்பது பெருமாநல்லூர் எனவும், சூரலூர் என்பது

இரா. ப. கருணாநந்தன்

கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

சூலூர் எனவும், கொங்கில் மாற்றம் பெற்ற ஊர்களைக் காண்கிறோம். ஆனால் முத்தூர் என்னும் ஊர்ப்பெயர் கொங்குச் சோழர் காலம் தொடங்கி இன்று வரை எந்த மாற்றமும் பெறாமல் முத்தூர் என்றே அழைக்கப்பெற்று வருகிறது.

குன்றத்தூர், பெருமாள் கோயில் வீரபாண்டிய விண்ணகரம் எனவும், பெருமாநல்லூர் ஈஸ்வரன் கோயில் உத்தம சோழீஸ்வரர்

கோயில் எனவும் அரசன் பெயர்களால் அழைக்கப்பெற்ற கோயில்கள் கொங்கில் பல உள்ளன. இதைப்போன்று முத்தூர் சிவன்கோயில் குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் கோயில் எனக் கல்வெட்டு களில் அழைக்கப்பெறுகிறது. எனவே இக்கோயில் கொங்கினை ஆட்சி செய்த குலோத்துங்க சோழன் காலத்தில் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

காங்கேயத்தைச் சார்ந்த வியாபாரி மோடன் செட்டியான இராசதேவன், முத்தூர்க் காணியுடைய வேட்கோவன், முத்தூர்க் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன் மகன் சங்கராயன், தென்கரை நாட்டுக்கொற்றனூர் காவலன், முத்தூர் நகரத்தார், முத்தூர் வெள்ளாளன் முதலியோர் கொங்குச் சோழர் காலத்தில் குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் கோயிலுக்குக் கொடைகள் அளித்துள்ளார்.

முத்தூர் காங்கேயத்திலிருந்து கொடுமுடி செல்லும் சாலையில் இன்றும் உள்ளதால் அக்காலத்திலும் இவ்வூர் கொடுமுடி நோக்கிச் சென்ற பெருவழியில் அமைந்திருந்தது என்றும், எனவே இவ்வூர்க் கோயிலுக்கு வணிகர்கள் கொடை அளிப்பதில் கவனம் செலுத்தினர் எனவும் கூற வாய்ப்புள்ளது.

கொடைஞர்களுள் காணியுடைய வே கோவன் ஒருவனைப் பற்றிய குறிப்பு குறிப்பிடத்தக்கது. முத்தூர்க் கல்வெட்டு காணி யுடைய செலிடை பெரிய நடுவில் பெரியான், சிறுப்பெரியான், என்னும் இரு வேட்கோவர்களைப் பற்றிக் கூறுகிறது. இவர்கள் காங்கேயம் நாட்டுப் பகுதியில் தாம் செய்யும் மட்பாண்டங்களை விற்பதற்கு அரசனிடம் உரிமை பெற்றவர்கள். எனவே கல்வெட்டு இவர்களைக் காணியுடைய வேட்கோவர்கள் என அழைக்கின்றது

முத்தூர்க் கல்வெட்டுகளில் காவலன் வளவர் என்னும் சமுதாயத் தார் குறிக்கப்பெறுவது தனிச் சிறப்புடையது. முத்தூரைச் சேர்ந்த காவலன் வளவர் ஒருவரையும் தென்கரை நாட்டுக் கொற்றனூரைச் சார்ந்த காவலன் வளவர் ஒருவரையும் முத்தூர்க் கல்வெட்டு அடையாளம் காட்டுகிறது.

கொங்கில் பார்ப்பாரச் சான்றார் பெற்ற உரிமைகள் பற்றிய கல்வெட்டு அவிநாசி முதலான ஊர்களில் உள்ளன. இதைப்

போன்று பார்ப்பாரச் சான்றார் அரசனிடம் உரிமை பெற்ற கல்வெட்டு ஒன்று முத்தூரில் அறியப்பெற்றுள்ளது.

கொங்கைப் பொருத்த அளவில் கொடைகளாக அச்சு என்னும் காசுகளே வழங்கப் பெற்றுள்ளன. தலைக்காட்டுக் கங்கர்கள் வெளியிட்ட இவ்வச்சுக் காசுகள் சேரர்களால் கொங்கு நாட்டில் வழக்கிற்கு வந்தது. அச்சுக் காசுகள் கல்வெட்டுகளில் பழஞ்சலாகை அச்சு, இடைச்சலாகை அச்சு, புதுச்சலாகை அச்சு என்று பல வகைகளில் அழைக்கப்பெற்றுள்ளன. சந்தியா தீபவிளக்கு எரிப்பதற்காக அச்சுக்காசு ஒன்று வழங்கப்பெற, அதே செயலுக்காக வேறு சில இடங்களில் 10 பணம் கொடையாக அளிக்கப் பெற்றுள்ளது. எனவே, ஒரு அச்சு என்பது 10 பணத்திற்குச் சமமாகிறது. அச்சு என்பது தங்க நாணயம் ஆகும். ஒரு அச்சு என்பதனைத் தற்போதைய மதிப்பில் $\frac{1}{2}$ பவுன் தங்கத்திற்கு இணையாகக் கொள்ளலாம் என்பது போளுவாம்பட்டிப் புலவர் திரு· இராமசாமி அவர்களின் கருத்து இத்தகைய அச்சுக்காசுகள் முத்தூர் சிவன் கோயிலில் சந்தியாதீபம் எரிப்பதற்காகக் கொடையாளர்களால் வழங்கப்பெற்றுள்ளன.

வீரராசேந்திரன் கல்வெட்டு ஒன்று குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் கோயிலில் பெரிய நாச்சியார் கோயில் இருந்ததைப் பற்றித் தெரிவிக்கிறது. இப்பெரிய நாச்சியார் கோயிலில் சந்தியா தீப விளக்கு எரிப்பதற்காக அச்சுக்காசு ஒன்று கொடையாக வழங்கப்பெற்றுள்ளது. முத்தூர் நகரத்தார் சிவன் கோயிலில் வீரராசேந்திரன் காலத்தில் மேற்கொண்ட கட்டளை ஒன்றிற்காக 6 அச்சுக்காசுகளைக் கொடையாக வழங்கியுள்ளனர்.

கல்வெட்டுகளைக்கொண்டு சோழர் காலத்தில் காசிப கோத்திரத்தைச் சேர்ந்த குலதீப பட்டர் என்பார் முத்தூர் சிவன் கோயில் தலைமை குருக்களாகத் திகழ்ந்தார் என அறிகிறோம். கோயில் சிவப்பிராமணர்கள் கொடையாளர்கள் வழங்கிய அச்சுக் காசுகளைப் பெற்று, அதன் வட்டித் தொகையைக் கொண்டு விளக்கேற்றி வைத்தல், மற்றைய பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

முத்தூர் குலோத்துங்க சோழீஸ்வரமுடையார் கோயில் கிழக்கு நோக்கிய கருவறை உடையது. கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியன உள்ளன. கோபுரத்தில் மேற் பகுதி இல்லாமல் வாசல் பகுதி மட்டும் உள்ளது இத்தகைய மொட்டைக் கோபுரத்தில் முன்பு கருடஸ்தம்பம் உள்ளது. மொட்டைக் கோபுரம், கருடஸ்தம்பம், மகாமண்டபம் முதலியன பிற்காலத்தைச் சேர்ந்தவை. மகாமண்டபத்தின் தென்புறம் வாசல் ஒன்று உள்ளது. கருவறை, சுவர்வரை கற்றளி, மேலே செங்கல் விமானம். இது இருதளமுடைய நாகர விமானம். கருவறைக்கு வடக்கே கிழக்கு நோக்கி அம்மன் சன்னதி உள்ளது. அம்மன் சன்னதிக்கும், ஈஸ்வரன் கோயிலுக்கும் நடுவே தெற்கு நோக்கிய நிலையில் கால பைரவர் சன்னதி உள்ளது. இக்கோயில் சுவர் களில் கி.பி. 14 அல்லது 15-யைச் சார்ந்த அழகிய புடைச் சிற்பங்கள் பல உள்ளன. அரசர், அடியார், யானை மேல் செல்லும் வீரர், முருகன், வள்ளி, தெய்வானை, நாயுடன் நிற்கும் நான்கு கையுடைய காலபைரவர், தண்டுடன் நிற்கும் தண்டபாணி, வாளுடன் போர் செய்யும் வீரர் இருவர் முதலிய புடைச் சிற்பங்கள் குறிப்பிடத் தக்கன. சிவன் கோயில் கருவறையில் கோஷ்டச் சிற்பங்கள், கொடுங்கைச் சிற்பங்கள், தோரணச் சிற்பங்கள் முதலியன இல்லை. இக்குறையைக் காலபைரவர் சன்னதி சிற்பங்கள் நிறைவு செய்கின்றன.

வடகிழக்கில் உள்ள சண்டீஸ்வரர் ஆலயத்தில் கி.பி, 12-ஐச் சார்ந்த அழகிய சண்டீஸ்வரர் சிற்பம் உள்ளது. திருச்சுற்று தென்கிழக்கு மூலையில் மேற்கு நோக்கிய சூரியன் சன்னதி உள்ளது. இச்சன்னதியில் கி.பி. 12-ஐச் சார்ந்த சூரியன் மூலவர் சிற்பமும், சுவரில் பிள்ளையார், கஜலட்சுமி முதலிய புடைச் சிற்பமும் உள்ளன.

சோழீஸ்வரமுடையார் கோயிலில் உள்ள கல்வெட்டுகளை வரிசைப்படுத்தும் பணியின் போது முத்தூர் கோயிலில் உதிரியாக இருந்த கி.பி 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அழகே உருவான ஜேஷ்டா மற்றும் சண்டிகேஸ்வரர் முதலிய சிற்பங்கள் புதிதாக அறியப்பட்டன. மேற்படி சிற்பங்கள் கொங்கு நாட்டு கலை வண்ணத்தில் உருவான அழகிய கலைப்படைப்புகள் ஜேஷ்டை வழிபாடு கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வாக்கில் கொங்குநாட்டிலும்

இருந்தது என்பதற்கு சிறந்த எடுத்துகாட்டு. மாந்தன், மாந்தி யோடு ஜேஷ்டா நடுவில் அபைய கரத்தோடு அமர்ந்துள்ளார். ஜேஷ்டைக்கு வலப்புறமாகக் கொடியின் மீது காக்கை காட்டப் பட்டுள்ளது அச்சிற்பத்தில் முன்னோர்கள் ஒரு வகையான பச்சை வண்ணத்தைப் பாதுகாப்பு நலன் கருதி அடித்துள்ளனர். அனைத்துக் கோவில்களிலும் காணப்பெறும் வழக்கைப் போன்று இந்த ஜேஷ்டா சிற்பமும் கோயிலின் வடமேற்கு மூலையில் வழிபாடு அற்ற நிலையில் கிடத்தப் பெற்றுள்ளது. இச்சிற்பத்தின் எழில் வரலாற்று உணர்வு உள்ளோரைக் கவரும். இச்சிற்ப அழகுக்கு நிகராக சண்டிகேஸ்வரர் சிற்பம் ஒன்றும் இங்கு உள்ளது புன்னகை முகத்துடன் பத்ரகுண்டலம் அணிந்து சிவனைப் போன்று ஜடாமகுடம் தரித்து வலக்கையில் மழுவுடன் துடி இடை யுடன் சுகாசனத்தில் அமர்ந்துள்ளார்.

முத்தூர் திருப்பணிக் குழுவினர் திருப்பணிக்காக கோயில் கருவறையை அகழ்ந்த போது இரண்டு செப்பு திருமேனிகள் உள்ளே இருந்து வெளியே வந்ததாக தெரிவித்தனர். அவற்றுள் ஒன்று ஆலிங்கின சந்திரசேகரராக இருக்கலாம் அல்லது ரிஷப வாகனராக இருக்கலாம். இத்திருமேனி கோயில் கட்டப்பட்ட கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. மேல்கையில் மான்பழு முன்வலக்கை அபயத்துடன் தாமரை இருக்கையின் மீது சிவன் நின்றுள்ளார். கருவறையின் கீழே அமைந்த சுரங்க அறையில் மணலுக்குள் இருந்து இத்திருமேனிகள் வெளிவந்ததாக சொல்லப் படுகின்றது. முஸ்லிம் மன்னர்கள் படையெடுப்புக்கு அஞ்சி முன்னோர்கள் இத்திருமேனிகளை மணலுக்குள் புதைத்து வைத்த தாகச் சொல்லப்படுகிறது. ★

---

1. குலோத்துங்கன் காலம் (1149-1183)
2. வீரராசேந்திரன் காலம் (1207-1252

# சேதுபதி காசுகள்

நாக. கணேசன்
காப்பாட்சியர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வரலாற்றுக்கு வளமை சேர்க்கும் ஆவணங்களுள் நாணயங்களும் அடங்கும். நாணயங்களைக் கொண்டு அவை வழக்கிலிருந்த நாட்டின் அன்றைய செல்வவளத்தையும், ஆட்சிப்பரப்பையும், ஆட்சி மொழியையும், அரசோச்சிய மன்னனின் இயற்பெயரையும் சிறப்புப் பெயரையும், அம்மன்னன் வெற்றி கொண்ட நாடுகளையும் அறிந்துகொள்ளும் வகையில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மன்னர்கள் தங்களது தன்னாட்சி வேட்கையின் வெளிப்பாடாகவும் ஆளுமையின் வெளிப்பாடாகவும், நட்புறவின் வெளிப்பாடாகவும் நாணயங்களை வெளியிடுவதுண்டு.

நாணயங்களைத் தங்கத்தாலும், வெள்ளியாலும் செம்பாலும் வெளியிட்டுள்ளனர். நாணயங்களை அச்சடிக்க நாட்டின் பல இடங்களில் 'அக்கசாலைகள்' இருந்தன. அக்கசாலைகளே நாட்டின் கருவூலங்களாகவும் விளங்கியுள்ளன.

விஜயநகரப் பேரரசிலும், அப்பேரரசுக்குட்பட்ட சிற்றரசுகளிலும் தங்கத்தால் வெளியிடப்பட்ட நாணயங்கள் 'கட்டி வராகன்', 'தொட்ட வராகன்', 'சுத்தவராகன்' என்று பெயரிட்டு வழங்கப்பட்டன. சுத்தவராகன் என்பது ஐம்பத்திரண்டு அரிசி எடையுள்ளது. அரை வராகன் மதிப்புள்ள 'வராகன் பர்தாப்' என்ற நாணயமும், பத்தில் ஒரு பங்கு வராகன் பர்தாப் மதிப்புள்ள 'பணம்' என்ற நாணயமும் தங்கத்தால் வெளியிடப்பட்டன. ஆறில் ஒரு பங்கு பண மதிப்புள்ள 'தார்' என்ற நாணயம் வெள்ளியாலும், மூன்றில் ஒரு பங்கு 'தார்' மதிப்புள்ள 'காசு' என்ற நாணயம் செம்பாலும் அக்கசாலைகளில் அச்சிடப்பட்டு வழக்கிலிருந்துள்ளன. பேரரசால் வெளியிடப்பட்ட நாணயங்களேயன்றித் தன்னாட்சி விரும்பிய சிற்றரசுகளும் நாணயங்களை வெளியிட்டுள்ளன. ஒரு சிற்றரசால் வெளியிடப்பட்ட நாணயங்கள்

அச்சிற்றரசின் எல்லையைக் கடந்தவுடன் பயனற்றதாயின என்று 'சீசர் பிரெடரிக்' என்ற வெளிநாட்டுப்பயணி கண்டு எழுதியுள்ளார்.

பேரரசன் வலிமை மிக்கவனாயின் சிற்றரசின் தன்னாட்சி முயற்சி அடக்கப்பட்டும், வலிமை குறைந்தவனாயின் தன்னாட்சி முயற்சி வலுப்பெற்றும் இருந்துள்ளன. பேரரசினை நிர்வகிக்கும் தலைநகர் தொலைவில் இருந்ததும் தன்னாட்சி முயற்சி வலுப்பெற காரணமானது. விஜயநகரப் பேரரசுக்குட்பட்டிருந்தாலும், தஞ்சை சேவப்ப நாயக்கரும், மதுரை விசுவநாத நாயக்கரும், வீரப்ப நாயக்கரும், சொக்கநாத நாயக்கரும் தம்மாட்சிப் பகுதியில் தங்களது பெயரில் நாணயங்களை வெளியிட்டுள்ளமை இதனையே உணர்த்துகிறது. மற்றவர் நாடு மதுரை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டிருந்தாலும் தளவாய் சேதுபதி, கிழவன் சேதுபதி போன்றோரின் தன்னாட்சி உணர்வே சேதுபதிகளையும் நாணயங்கள் வெளியிடச் செய்தது எனலாம். அச்சேதுபதி மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் சுழிப்பணம், வெள்ளிப் பணம், கழிப்பணம், மயிலைப் பணம், வராகன், பொன் என்ற பெயர்களில் சேதுபதி சீமையில் வழக்கிலிருந்துள்ளன. சுழிப்பணம் என்பது பன்னிரண்டு பைசா மதிப்பும், வெள்ளிப்பணம் என்பது பதினைந்து பைசா மதிப்பும், கழிப்பணம் என்பது இருபத்தோரு பைசா மதிப்பும், வராகன் என்பது மூன்று ரூபாய் ஐம்பது பைசா மதிப்பும் கொண்டவையாகும். தளவாய், ஸ்ரீ உடையதேவன் போன்ற தங்களது சிறப்புப் பெயரையும் காளை உருவத்தையும், காளை மீது மனிதன் அமர்ந்த உருவத்தையும், கணேசன், முருகன் போன்ற தெய்வ உருவங்களையும் பொறித்து வெளியிட்டுள்ளனர்.

கி.பி. 1659-இல் திருமலை நாயக்கர் விஜயநகரப் பேரரசன் மூன்றாம் வேங்கடனுக்குக் கப்பம் கட்டாமல் தன்னாட்சி பெற விரும்பியதைப் போன்று மறவர் நாட்டில் இரண்டாம் சடைக்கத் தேவன் என்ற ''தளவாய் சேதுபதி'' திருமலை நாயக்கருக்குக் கட்டுபடாமலும், கப்பம் செலுத்தாமலும் தன்னாட்சி பெற முயற்சித்தான்.

அச்சேதுபதி மன்னன் வெளியிட்ட நாணயங்களின் ஒரு பக்கத்தில் தமிழில் "தளவாய்" என்ற தனது சிறப்புப் பெயரையும், மறு பக்கத்தில் தோகை விரித்தாடும் மயிலையும் பொறித்துத் தனது சுதந்திர தாகத்தை சொல்லாமல் உணர்த்தியுள்ளதைக் காணலாம்.

சமீபத்தில் கட்டுரையாளரால் இராமேசுவரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சேதுபதி காசுகளின் ஒரு பக்கத்தில் வட்ட வடிவப் புள்ளிகளுக்கிடையே "சேதுபதி" என்று தமிழில் எழுதப்பட்டும், மறு பக்கத்தில் காளையின் மீது மனித உருவம் பொறிக்கப் பட்டும் காணப்படுகிறது. இக்காசுகள் செம்பினால் வெளியிடப் பட்டுள்ளன. இக்காசுகளில் காணப்படும் காளைச் சின்னமானது விஜயநகர மன்னர்களால் மதுரை மீனாட்சியம்மன் கோயில் கொடிக்கம்பத்திலும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயில் கொடிக்கம்பத்திலும் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம், முதலாம் தேவராயர், கிருஷ்ணதேவராயர், முதலாம் திருமலைராயர், இரண்டாம் ஸ்ரீரங்கன் போன்ற விஜயநகர மன்னர்கள் வெளி யிட்ட நாணயங்களிலும் இக்காளைச் சின்னத்தைப் பொறித் துள்ளனர். அப்பேரரசின் கீழ் ஆட்சி செய்த மதுரை வீரப்பநாயக்கர் சொக்கநாத நாயக்கர், மங்கம்மாள் போன்ற நாயக்க மன்னர்களும் பேரரசைப் போன்று தம்மாட்சிப் பகுதியில் தாங்கள் வெளியிட்ட நாணயங்களிலும் இக்காளைச் சின்னத்தைப் பொறித்துள்ளதைக் காண முடிகிறது. காளைச் சின்னமானது விஜயநகர மற்றும் மதுரை நாயக்கப் பேரரசுகளின் அரச சின்னமாகவே விளங்கி யுள்ளது.

இரு நாடுகளுக்கிடையே நிலவிய நட்புறவை வெளிப்படுத்தும் வகையிலும் ஒரு நாட்டின்மீது கொண்டுள்ள ஆளுமையை வெளிப் படுத்தும் வகையிலும், பிறிதொரு நாட்டின் சின்னத்தையும் நாண யத்தில் பொறித்து வெளியிடுவதுண்டு. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தான் வெளியிட்ட நாணயத்தில் ஒரு பக்கத்தில் "சுந்தரபாண்டியன்" என்று தமிழிலும்

பாண்டியர் சின்னமான கயலையும், மறுபக்கத்தில் ஹொய்சளிருக் குரிய "வராக" சின்னத்தையும் பொறித்து இரு நாட்டுச் சின்னங் களுக்கும் சம மதிப்பளித்து வெளியிட்டதன் மூலம் அவ்விரு நாடு களுக்கிடையே நிலவிய நட்புறவை வெளிப்படுத்தினான்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராசன் தன்னால் அடிமை கொள்ளப்பட்ட பாண்டிய, சேர நாடுகளில் வெளியிட்ட நாணயங்களில் தனது பெயரையும், வெற்றிப் பெருமிதத்துடன் நிற்கும் மனிதன் காலடியில் பாண்டியருக்குரிய "கயல்" சின்னத் தையும், சேரலாதன் நாணயத்தில் காணப்படுவதைப் போன்று சேரருக்குரிய "பாதா" உருவத்தையும் பொறித்து வெளியிட்டதன் மூலம் தனது ஆளுமையும், ஆட்சிப் பரப்பையும் வெளிப்படுத்தினான்.

கி.பி. 14-15 - ஆம் நூற்றாண்டில் மதுரையை தம்மாட்சிக் கீழ் கொண்டு வந்த வாணாதிராயர்களில் சுந்தரத்தோளுடையான் மாவலிவாணாதிராயன் என்பவன் வெளியிட்ட காசுகளில் பாண்டியர் சின்னமான மீன் மீது வாணாதிராயரின் சின்னமான கருடன் அமர்ந்திருப்பது போல் காட்டிப் பாண்டிய நாட்டினை வாணாதிராயர்கள், வெற்றிக் கொண்டமையையும் பாண்டியர் மீது வாணாதிராயர்கள் கொண்ட ஆளுமையையும் வெளிப்படுத்தினான்.

இவற்றைப் போன்றே தற்போது கிடைத்துள்ள சேதுபதி காசு களிலும் மதுரை நாயக்கருக்குரிய காளைச் சின்னத்தைப் பொறித்து அதன்மீது மனிதன் அமர்ந்து செல்லுவதைப் போல் காட்டி, நாயக்கர் ஆட்சியின் மீது சேதுபதிகள் கொண்டிருந்த ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கக்கூடும். கிழவன் சேதுபதி என்ற மறவர் நாட்டு மன்னன் கி.பி. 1698-ல் மதுரை நாயக்கப் பேரரசி மங்கம்மா ளிடமிருந்து மதுரையைக் கைப்பற்றி மறவர் நாட்டோடு இணைத்து ஆட்சி செய்தவன். கப்பம் கட்டிய பாளையக்காரர்கள். என்ற நிலையை மாற்றித் தனிநாடு கண்டு முப்பத்தாறு ஆண்டுகள் தன்னாட்சி செலுத்தியவன். எனவே தனியாட்சி புரிந்த தன்னிக ரில்லா மறக்குலமன்னன் இவன் ஒருவனே என்பதாலும் இக்காசு களில் காணப்படும். "சேதுபதி" என்பதிலுள்ள எழுத்தமைதி

கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருப்பதாலும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தம்மையாண்ட மதுரை நாயக்கரையே வெற்றி கொண்டு மதுரையைக் கைப்பற்றி, மறவர் நாட்டோடு இணைத்து ஆட்சி செய்த பெருமை கொண்ட கிழவன் சேதுபதியே இக்காசுகளை வெளியிட்டிருக்க வேண்டுமெனக் கருதலாம். இக்காசுகள் தற்போது இராமேஸ்வரம் தொல்பொருள் ஆய்வுத்துறை அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

துணைசெய்த நூல்கள்


1. மதுரை நாயக்கர் வரலாறு - அ.கி. பரந்தாமனார்.
2. விஜயநகரப் பேரரசில் நிலைப்பெற்றிருந்த பொருளாதார வாழ்க்கை வரலாறு - தே.வே. மகாலிங்கம்
3. பாண்டியன் வரலாறு - டாக்டர் கே.வி. இராமன்
4. தென்னிந்திய வரலாறு - கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி
5. Ramanathapuram District Archaeological Guide Dr. R. NAGASWAMY & N. S. RAMASWAMY
6. The Hoysalas in Pandimandalam - N. SETHURAMAN
7. Tamil Coins - Dr. R. NAGASWAMY
8. Ramnad District - Manuel
9. Ramanathapuram District Gazetteer
10. பாண்டிய நாட்டில் வாணாதிராயர் – 1987 - திரு. வெ. வேதாசலம் தொ.நு.ப.பா. கழக வெளியீடு
11. Journal or History, Vol. xxix - 1951. - T.V. MAHALINGAM

# கட்டபொம்மன் வழங்கிய செப்பேடு

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர், தொல்பொருள் ஆய்வுத்துறை

வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தமிழ்நாட்டில் விடுதலைப் போரை நிகழ்த்திய வீரபாண்டிய கட்டபொம்மன் கடவுள் பக்தி மிக்கவராகவும் இருந்துள்ளார். சக்கம்மாவைக் குலதெய்வமாகக் கொண்டிருந்த கட்டபொம்மன், திருச்செந்தூர் சுப்பிரமணியர் திருப்பணிக்குத் தான பட்டயம் வழங்கியுள்ளார். தினமும் திருச்செந்தூர்க் கோயில் பூசை முடிந்த பின்பே கட்டபொம்மன் உணவு அருந்தினார் என்று செவி வழிச் செய்தியாகவும் அறிகிறோம். முருகன் மீது எத்தகு பக்தி கொண்டிருந்தான் என்பதை அவன் அளித்த இச்செப்பேடு மூலம் அறியலாம்.

திருவாவடுதுறை ஆதினத்தில் உள்ள செப்பேடுகளில் ஒன்றாக இது உள்ளது. கி.பி. 1778-ல் வழங்கப்பட்ட இச்செப்பேட்டை முதன் முதலில் படியெடுத்த பெருமை தமிழ்ப் பல்கலைக்கழகத்துக் குரியதாகும். தெலுங்கராகக் கருதப்படும் கட்டபொம்மனை முத்தமிழ் அதிபனாகச் செப்பேட்டில் காண்கிறோம். குடநாட்டைச் சார்ந்ததாகத் திருச்செந்தூர் இருந்திருக்கிறது. திருச்செந்தூரார்ன திரிபுவன மகாதேவி சதுர்வேதி மங்கலம் என இவ்வூருக்குப் பெயர் இருந்திருக்கிறது. சுப்பிரமணியக் கடவுளின் சிறப்புகள் முதலில் கூறப்படுகின்றன. இதையடுத்து தானப் பட்டையம் வழங்கிய கட்டபொம்மனின் பெருமைகள் சுருக்கமாகப் பேசப்படுகின்றன. மன்னனே ஆணையிட்டு எழுதித் தருவதாகச் செப்பேட்டில்

காண்கிறோம். மன்னனுக்கு உரிமையான கிராமங்களின் வகைகள் பின்னர் கூறப்படுகின்றன.

எல்லா சாதிக்கும் பொருந்தும்படி மன்னன் ஆணையிட்டுள்ளான் என்று செப்பேட்டின் மூலம் அறிகிறோம். தானத்தைக் காப்பவர் எய்தும் நால்வகைப் பதவிகள் சாலோப, சாமிப, சாரூப சாயுச்சம் என்று கூறப்படுகின்றன. செப்பேடு எழுதியவர் இராயசம் குமாரசுவாமியா பிள்ளையின் மகனாகிய சிவசுப்பிரமணியன் ஆவார். இச்செப்பேடு பல வகைகளில் சிறப்புடையதாக அமைகிறது.

1. செப்பேட்டினை எழுதியவர் அரசின் உயர் அதிகாரியின் மகன் ஆவார்.
2. கட்டபொம்மு என்றும் கட்டபொம்முலு எனவும் வழங்கப்படும் இம்மன்னன் பெயர், தமிழ் வழக்கிற்கேற்ப பொறிக்கப்பட்டுள்ளது. முழுப் பெயர் செகவீரராம செகவீர பாண்டியக் கட்டபொம்ம நாயக்கர் என்பதாகும்.
3. செப்பேட்டில் பிழையான சொற்றொடர் பொதுவாக இல்லாததுடன் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.
4. வடமொழிச் சொற்கள் வருமிடங்களிலும் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. 'ஐ' என்ற எழுத்து நீங்கலாக வட எழுத்துக்கள் இல்லை எனலாம்.
5. சுவத்திரி சாலிவாகன சகாற்றம் 1700 என்று தொடங்குகிறது தமிழ் வருசம், கொல்லம் வருசம் எனத் தமிழ் எழுத்துகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன.
6. முருகன் போற்றப்படும் போது அவனுடைய மயில் வாகனமும் கோழிக் கொடியும் சுட்டப்படுகின்றன. சுரூபவல்லி தெய்வயானை சமேதரான சுப்பிரமணியர் எனக் குறிக்கப்படுகிறான்.
7. பாஞ்சை நகராதிபன், சக்கதேவி அனுகூலன், துட்டநிக்கரக சிட்ட பரிபாலன், கெசமன்னியர் கோளரி மறுமன்னியர், சற்ப கெருடன், ரணமுக அத்த வீரன், அருணநயமுக சந்திரரோதயன், இயலிசை முத்தமிழாதிபன்,

கவிசாருவபூமன், பச்சைக்குடை பூச்சக்றிவானக் குடைக் கதிபன், தண்டுவார் முண்டன், தென்னாட்டுராயன், ரட்டைவாளுக்கதிபன், மயில்கொடி சேவல் கொடி ரிசபக் கொடி அனுமக் கொடி கெருடக் கொடிக்கதிபன் சோதி தனில் உகந்த சிவகந்தன் அடி மறவாதவன், என்று மன்னன் போற்றப்படுகிறான்.

8. கவிள்த்து கட்டின கிரகம் என்பது - கூரை வீடு என்று பொருளாக இருக்கலாம்.
உம்பள கிராமம் - முற்றூட்டு அல்லது மானிய கிராமம்
சீவித கிராமம் - வாழ்க்கைச் செலவிற்காகக் கொடை வழங்கப்பட்ட கிராமம்.
சிறுபாட்டுக் கிராம் - குறைந்த வருவாய் தரும் கிராமம்
அமரக் கிராமம் - வீரமரணமுற்றோருக்கு வழங்கப்பட்ட கிராமம்

ஆண்டிற்கு ஒருமுறை குறுணி (மரக்கால்) தானியம் வழங்கவேண்டும். அதையும் கோயில் தலத்தார் மனுசர் வசம் வழங்க வேண்டும். இங்குள்ள கோயில் தலத்தார் மனுசர் என்பது திருவாவடுதுறை ஆதீனக் குருமகானின் உத்தரவு பெற்ற தம்பிரான் எனலாம். இச்செப்பேட்டிற்குச் சற்று முன் கி.பி. 1769-ல் வெளியிடப்பட்ட வேறொரு செப்பேட்டில் சிவகாசி நாடார்கள் அனைவரும் திருச் செந்தூர் திருப்பணிக்காகத் திருவாவடுதுறை ஆதீனத்திடம் பணம் வழங்கியதை நோக்கும் போது இக்கருத்து தோன்றுகிறது.

தானியம் என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் நெல்லையே இது குறிப்பிடும் எனலாம். ஏனெனில் ஈரமும் பதரும் நீக்கி வழங்க வேண்டும் என்று கூறப்படுகிறது. தானத்தைக் காப்பவர் எய்தும் சிறப்பைக் குறிப்பிடும் செப்பேடு தானத்திற்கு எதிராக இருப்பவர் அடையும் கேட்டைக் குறிப்பிடவில்லை. இது செப்பேட்டில் குறிப்பிடத்தக்க சிறப்பு எனலாம். செப்பேடு $24 \times 13$ செ.மீ. அளவுடன் செவ்வகமாக உள்ளது. முதல் பக்கத்தில் 39 வரிகளையும் பின் பக்கத்தில் 40 முதல் 58 வரிகளையும் கொண்டுள்ளது.

வீரம் செறிந்த கட்டபொம்மனின் ஆழ்ந்த முருகபக்திக்கும் தன் நாட்டையாளும் இறையாண்மைக்கும் தமிழ்ப்பற்றிற்கும் இச்செப்பேடு உதாரணமாக விளங்குகிறது. முந்தையோர் மரபினை

ஏற்று பொதுமக்கள் ஆண்டிற்கொரு குறுணிதானியம் திருவாவடு துறை ஆதீனத்திடம் வழங்குமாறு ஆணையும் பிறத்துள்ளார்.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பாஞ்சாலங் குறிச்சியில் அகழாய்வு மேற்கொண்டு கட்டபொம்மன் கோட்டை யின் நாளோலக்க மாளிகையின் மேல் பீடம், கல்யாண மண்டபப் பகுதி, யானை கட்டும் தறி, கோயிற் பகுதி போன்றவற்றை வெளிப் படுத்தியது. இந்த அகழாய்வு பற்றிய அறிக்கை கட்டுரை வடிவில் தமிழிகா-ஆண்டு 1969 இதழில் வெளியிட்டுள்ளது. பிறந்த பூமிக்காக உயிர்துறந்தவன் கட்டபொம்மன். இவர் கி பி. 1778-ல் வெளி யிட்ட செப்பேட்டைக் காணும்போது;

> 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்.'

என்ற குறளே நினைவிற்கு வருகிறது. இனிச் செப்பேட்டின் வாச கத்தைக் காண்போம்.

1. வ சுவத்திரி சகாற்றம் 1700க்கு மே
2. ல்ச் செல்லாநின்ற கொல்லம் வருசம் விளம்பி வருசம்
3. உத்தராயணமான தை 28 தேதி குருவாரமும் பூறுவ பட்
4. சத்துத் துவாதெசியும் மாகேந்திர நாக யோகம் பால
5. வாகறணமும் சுபயோக சுபகரணமும் பெத்த மிருகசீ
6. ருச நட்செத்திரத்தில் நாள்ச் செய்த தான சாதனப்
7. பட்டையமாவது குடநாட்டுத் திருச்செந்தூரான தி
8. ரிபுவன மகாதேவி சதுர்வேதிமங்கலம் நா
9. யனாரிளைய நாயினாரான கிருட்டித் திதி சங்க
10. ராத்தி கோபாவனுக்கிரக பஞ்ச சுத்த
11. வலிய வீரமயில் வாகன குக்குடத் துவஜ
12. சுரான சுராயிப சகல சத்தியாதமக சுருப
13. வல்லி தேவநாயகி சமேத சுப்பிரமணிய
14. சுவாமி சன்னிய்தானத்தில்த் திருப்ப

15. ணிக்கு ஆச்சந்திராக்கம் ஆகத் தான
16. சாதனப் பட்டையமாவது பாஞ்சை
17. நகராதிபன் சக்கதேவி அனுகூலன்
18. துட்ட நிக்கரக சிட்ட பரிபாலனன் கெ
19. ச மன்னியர் கோளரி மறு மன்னியர்
20. சற்ப்ப கெருடன் ரணமுக சுத்த வீரன்
21. அருண நயமுக சுந்திரோதய ணியலிசை
22. நாடக முத்தமிழாதிபன் கவி சாருவ பூம
23. ன் பச்சைக் குடை பூச்சக்கிறவாளக்கு
24. டைக்கதிபன் தண்டுவார் முண்டன் தென்
25. னாட்டு ராயன் ரட்டை வாள்க்கதியன் மயில்
26. க் கொடிச் சேவல்க் கொடி ரிசபக் கொடி அனு
27. மக்கொடிக் கெருடக்கொடிக் கதிபன் சோ
28. தினிலுகந்த சிவ கந்தனடி மறவாத அடியே
29. ன் செகவீர ராமச் செகவீர பாண்டியக் கட்ட
30. பொம்ம நாயக்கரோம் தான சாதனமாகத்
31. தாம்புர சாதனப் பட்டைய மெகுதிக்
32. கொடுத்தபடி தான சாதனமாகத் தாம்
33. புர சாதனப் பட்டையமானது யென்னு
34. டைய ஆதிக்கத்தில்ச் சேர்ந்த கிறாமம்
35. உண்பளக் கிறாமஞ் சீவிதக் கிறாமஞ் சிறு
36. பாட்டுக் கிறாமம் அமரக் கிறாம முதல் ஆகிய
37. நத்ததுக்கும் சகல சாதிக்கும் கவிள்த்திக்
38. கட்டின கிரக ஒன்றுக்கு வருசாசலங் குறு
39. ணித் தான்னிய வீதம் கோவில்த் தலத்தா

## பாஞ்சாலங்குறிச்சிப் பட்டையம்

### பின்பக்கம்

40. ர் மனுசர் வசம் யீரம்(ப) பதர்த் தூத்தி
41. அளந்து கொடுத்து வருவோமாக
42. வும் யிந்தத் தர்மம் ஆச்சந்திராக்க
43. ம் சந்ததிப் பிறதி[]வஷம் ஆதிக்கத்தில்ப்
44. பரிபாலனம் பண்ணிக் கொண்டு வருவோ
45. மாகவும்யிந்தத் தற்மத்துக்கு வாக்குச்ச
46. காயம் சரீர சகாயம் அறிந்த சகாயம்
47. பண்ணின பேர் சாலோக சாமீப சாரூப
48. சாயுச்ச பதம் பெறுவாராகவும் யிப்படி
49. க்குச் சம்மதித்துத் தான சாதனமாக யி
50. ந்தத் தாம்புர சாதன பட்டையம் சுவாமி
51. சுப்பிரமணிய சாமி சன்னிய தானத்
52. தில்த் திருப்பணிக்குத் தாம்புர சாதன
53. ப் பட்டையமெளுதித் தானம் பண்ணி
54. க் கொடுத்தேன் செகவீர ராம செ
55. க வீர பாண்டியன் கட்ட பொம்ம நா
56. யக்கரோம் உ யிந்த பட்டையமெளு
57. தினேன் ராயசங் குமாரசாமியா
58. பிள்ளை குமாரன் சிவ சுப்பிரமணியன் உ

# சிரியக்கி பழஞ்சலாகை

**டாக்டர் ஆர். ரங்கராஜ்**

தமிழ்த் துறை
சிக்கிய நாயக்கன் கல்லூரி
ஈரோடு - 4

சிரியக்கி பழஞ்சலாகை, புதுச்சலாகை என்ற நாணயங்களைக் கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.[1] ஏற்கெனவே புழக்கத்திலிருந்த காசு சிரியக்கிசலாகை என்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்னர் ஒரு கால கட்டத்தில் மீண்டும் புதிதாக அச்சடித்து அதே வகைக் காசுகளைப் புழக்கத்தில் விட்டபோது இவை புதுச்சலாகை என்றும் முன்னர் வழக்கத்திலிருந்தவை பழஞ்சலாகை என்றும் அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இப்பெயரில் இருந்து ஸ்ரீஇயக்கி என்ற பெண் தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது என்பது பெறப்படுகிறது. சலாகை என்பது காசு என்ற பொருளில் வழங்கப்பட்டிருந்தது.

சலாகை-என்றால் திவாகர நிகண்டில் அகல்மணியின் பொதுப் பெயராகக் கூறப்பட்டுள்ளது.

'அரதனம் - சலாகை அகல்மணிக்கு ஆகும்'
(பாடவேறுபாடு - அகன்ற மணியின் பெயர்
உயர்ந்த மணியின் பெயர்)

இதே நிகண்டில்,

மனவும், காசும் மணியின் பொதுப்பெயர்'
(பாடவேறுபாடு : மணியும்)

என மணி-காசு என்ற பெயரிலும் அழைக்கப்பட்டிருந்தது.

ஆக, சலாகை என்பது அகன்ற வடிவமுள்ள உயர் ரக மணி. இந்த மணிக்குக் காசு என்ற பெயரும் இருந்தது என்பதால் உயர் ரக மணியாகிய அகன்ற வடிவமுள்ள மணிக்கூற்கள் காசுகளாக

பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. அம்மணிக் கற்களில் ஸ்ரீஇயக்கி என்ற பெண் தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டிருந்தது என்பது தெரிகிறது.

பிங்கல நிகண்டு

'நாராசமும் சவளமும் நன்மணியுஞ் சலாகை'

என்கிறது. நன்மணி எனச் சலாகை இந்நிகண்டிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. நன்மணி என்பதற்கு விளக்கம் தரும்போது 'தெய்வ அகன் மணி' எனக் கூறப்பட்டுள்ளதால் தெய்வ உருவம் பொறிக்கப் பட்ட அகன்ற மணி எனப் பொருள் கொள்ளலாம். ஸ்ரீஇயக்கியின் உருவம் பொறிக்கப்பட்டு அகன்ற மணியாகிய ஸ்ரீஇயக்கி பழஞ்ச லாகை அச்சமயத்தில் வழக்கத்திலிருந்த காரணத்தினாலேயே நன்மணி என்பதற்கு அவ்விளக்கம் தரப்பட்டிருத்தல் வேண்டும் என்று கூறலாம்.

**மணிமேகலையில்**

'சலாகை' நுழைந்த மணித்துளை யகவையின்' எனக் காணப் படுகிறது. சலாகை என்பதற்கு உரையாசிரியர் 'சிறிய நாரசம்' எனப் பொருள் கூறுகிறார். பிங்கல நிகண்டிலும், கழகத் தமிழ் அகராதியிலும் சலாகை என்பதற்குச் சிறு நாராசம் என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. நாராசம் என்றால் சிறிய கம்பி என்று பொருள் கூறுகிறது கல்வெட்டுக் கலைச் சொல் அகராதி.

சலாகை நுழைந்த மணித்துளை என்பதால் சிறு கம்பியால் மணியில் துளையிடப்பட்டிருந்தது என்பது தெரிகிறது. கொங்கு நாட்டுக் கொடுமணலில் துளையிடப்பட்ட மணிகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. கார்னிலியன், அமித்திஸ்ட், பச்சைக்கல், வெள்ளைக்கல், பளிங்குக்கல், வெங்கச் செங்கல் ஆகியவற்றாலான மணிகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன.

கொங்கு நாட்டு வெள்ளலூரில் குதிரையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ள கார்னிலியன் மணியும் ரோமானியப் பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்ட அமித்திஸ்ட் மணியும் கிடைத்துள்ளன.[2] எனவே இயக்கியின் உருவம் பொறிக்கப்பட்ட சிரியக்கி பழஞ்சலாகை என்பது மணிக்கல்லால் ஆகிய காசேதான் என்பதில் ஐயமில்லை.

வெள்ளலூரில் இரவிகோதையின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இம்மன்னன் களப்பிர மரபைச் சேர்ந்தவன் என்றும்[3] களப்பிர மன்னர்கள் பௌத்த மரபைச் சார்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.[4] இவ்வூரில் ஏராளமான ரோமானியக் காசுகள் கிடைத்துள்ளன. இவ்வாறு அயல் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொள்பவர்கள் பௌத்தர்களேயாவர். ரோமானிய, கிரேக்க நாட்டுக் கலைத்தாக்கங்களை காந்தாரச் சிற்பங்களில் காணலாம். எனவே வெள்ளலூர் அமித்திஸ்ட் மணியில் காணப்படும் ரோமானியப்பெண் உருவம் ரோமானிய - இந்தியக் கலைப் பாணியிலமைந்த பௌத்த யக்ஷியாகவும் இருக்கலாம். மேற்கூறிய மணியில் பொறிக்கப்பட்ட உருவத்தை மேலும் ஆய்வு செய்யலாம். ஸ்ரீயக்ஷியை சமணமும் பௌத்தமும் தங்கள் மதங்களின் சிறு தெய்வமாகக் கொண்டிருந்தன. சிரியக்கி பழங்காசில் உள்ள யக்ஷி பௌத்த யக்ஷியாக இருத்தல் வேண்டும். பின்னர் சமணம் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தபோது சமண யக்ஷியின் உருவம் பொறிக்கப்பட்ட காசினை அதே பெயரில் ஸ்ரீஇயக்கி புதுச்சலாகை என வெளியிட்டிருக்கலாம்.

கொங்கு நாட்டு ஆற்றோரப்பகுதியில் பெண் தெய்வ உருவம் பொறிக்கப்பட்ட செப்புக்காசுகள் எழுத்துகள் ஏதுமின்றி ஒரு பக்கம் தட்டையாகவும் மறுபக்கம் புடைப்பாகவும் கிடைத்துள்ளன என்றும் இக்காசுகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்றும் தெரிய வருகிறது.[5] செம்பில் அச்சடிக்கப்பட்ட இக்காசுகளில் உள்ள உருவத்தை ஸ்ரீஇயக்கியாகக் கொண்டால், இக்காசை ஸ்ரீஇயக்கி புதுச்சலாகை எனக் கொள்ளலாம்.

மதுரைக்கு அருகிலுள்ள தென்கரை மூலனாதசுவாமிக்குத் திருமஞ்சனத்துக்கும் அமுதுபடிக்கும் மாஹேஸ்வர பூஜைக்கும் கொங்கு நாட்டுப் படைத் தலைவன் ஒருவன் மேற்சலாகை சுத்தியான அச்சு என்ற காசுகளைக் கோயில் பண்டாரத்தில் செலுத்தினான்.[6] முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டில் கூறப்படும் படைத் தலைவன் கொங்கு நாட்டிலிருந்து வரும்போது இக்காசுகளைக் கொண்டு வந்து கோயிலுக்குக் கொடையளித்திருக்க வேண்டும்.

மேற்கூறியவாறு நாணயங்கள் சலாகைகள் என்ற பெயரில் வழங்கப்பட்டதும், சலாகைகள் என்று கூறப்படும் மணிக்கற்கள் காசுகளாக வழங்கியதும் மணிக் கற்களுக்குச் சிறப்புப் பெற்ற கொங்கு நாட்டில் மட்டுமே என்பதை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்தியிருக்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. விஜயமங்கலம், திங்களூர், கரூர் கல்வெட்டுகள் ஸ்ரீயக்கி பழஞ் சலாகை பற்றிக் குறிப்பிடுகின்றன. தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி 4 எண் 397.
2. டாக்டர் இரா. நாகசாமி 'டமில் காயின்ஸ்' ப. 20
திரு. இரா. பூங்குன்றன் - கருவூர் வஞ்சி - வெளியிடப்படாத கட்டுரை.
3. திரு. நடன. காசிநாதன் - வெள்ளலூர் கல்வெட்டுகள் - கல்வெட்டு இதழ் 21.
4. திரு. நடன. காசிநாதன் - களப்பிரர் வரலாறு.
5. திரு. அளக்குடி ஆறுமுக சீத்தாராமன் கூறிய செய்தியை கல்வெட்டாய்வாளர் டாக்டர் ஆ. பத்மாவதி - கட்டுரை ஆசிரியருடன் கலந்துரையாடியபோது தெரிவித்தார்.
6. தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி 5 – எண் 296.

# ஆலங்காயத்தில் அரிய பாறை ஓவியங்கள்

**ஆர். வசந்தகல்யாணி**
சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவதற்கான தொன்மைச் சான்றுகளில் முதலாவதாகக் கருதப்படுவது ஓவியம். எழுத்திற்கு முன் எழுந்தது ஓவியம். எழுத்து என்ற சொல் ஓவியத்தையே குறிப்பதாக இருந்தது. மனித இனத்தின் உள்ளுணர்வு வெளிப்பட்ட முதல் வாயில் ஓவியம் என்ற அளவு பெருமை படைத்தது. ஓவியங்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடங்கி இருந்துள்ளதைச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன.

குறிப்பிட்ட காலம் வரை இந்தியாவில் அதிகம் கிடைக்காத நிலை இருந்து அதன்பின் மத்திய இந்தியப் பகுதிவரை மட்டுமே தொல்பழங்கால ஓவியங்கள் கிடைக்கின்றன என்ற கருத்து வரலாற்று அறிஞர்களிடையே இருந்தது. 1980-ல் தமிழகத்தில் மல்லப்பாடியில் தொல் பழங்கால ஓவியங்கள் கிடைத்ததைபடுத்துப் புற்றீசல் போல் இவ்வோவியங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெளிப்பட்டு வருவதைக் காண்கிறோம். வடார்க்காடு, தென்னார்க்காடு, மதுரை, சேலம், தருமபுரி, நீலகிரி, கோவை மாவட்டங்களில் 25-க்கும் மேற்பட்ட இடங்களில் தொல் பழங்கால ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன.[1] மனிதனின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும், சிந்து சமவெளிக் குறியீடுகளை ஒத்தும், வேட்டைக் காட்சிகளாகவும், குழுவாய் வாழ்ந்த கூட்டத்தினரின் கேளிக்கைகளை அறியும் வகையிலும் இன்னபிற வகையிலும் இவ்வோவியங்களைப் பகுப்பாய்வு செய்யலாம். செங்காவி வண்ணம் பழமையின் அறிகுறி. அடுத்து வெள்ளை வண்ணத்தில் தீட்டப்பட்டன. இன்னும் பிற்காலத்தே சில இடங்களில் கருப்பு வண்ணத்திலும் காணப்படுகின்றன.

ஓவியங்களில் காணப்படும் காட்சிகளின் அடிப்படையிலும் அவை காணப்படும் இடங்களுக்கு அருகாமையில் கிடைக்கக்கூடிய தொல்பொருட்களின் காலத்தோடு ஒப்பிட்டும் இவ்வோவியங்களின் காலம் கணிக்கப்படுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஓவியங்கள் காணப்படும் இடங்களில் புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. இன்னும் சில இடங்களில் பெருங்கற்காலக் கல் திட்டைகளிலும் இவ்வோவியங்கள் காணப்படுகின்றன.

## ஆலங்காயம் ஓவியங்கள்

அண்மையில் வடார்க்காடு மாவட்டம் ஆலங்காயம் மலைப் பகுதிகளில் துர்க்கம் என்றழைக்கப்படும் இடத்தில் வெள்ளை வண்ணத்தில் தொல்பழங்கால ஓவியங்கள் இருப்பது கண்டறியப் பட்டது. வடார்க்காடு மாவட்டத்தில் இதற்கு முன் குடியாத்தம் அருகில் சென்னராயன் பள்ளியிலும், சந்திரபுரத்திலும், இரத்தின கிரியிலும்[2] மிக அண்மையில் சிவநாதபுரத்திலும் பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டன.

அடுத்து இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள ஆலங்காயம் பாறை ஓவியங்கள் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகின்றன. ஆலங்காயம் பெத்தூர் கிராமத்திலிருந்து வட திசையில் அமைந்துள்ள தொடர்ச்சி யான மலைப்பகுதிகளில் ஆலங்காயம் - ஆம்பூருக்கு இடைப்பட்ட துர்க்கம் என்று அழைக்கப்படும் மலையில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. பெத்தூரிலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உயர்ந்த மலைகளின் உச்சியில் காணப்படும் இப்பாறை ஓவியங் களில் பல கால வெள்ளத்தில் அழிந்து விட்டாலும் எஞ்சியுள்ளவை அனைத்தும் சிறப்பானவை. அவற்றுள் குறிப்பிடத்தக்கன :

1. மீனின் தோற்றம் : பாறையில் செங்குத்தாக வரையப்பட்டுள்ள மீன் அதன் முட்பகுதி தெரியும் வகையில் தீட்டப்பட்டுள்ளது. இதை எக்ஸ்ரே ஓவியம் என்று கூறலாம். உடலுள் உறுப்புகள் தெரியும் வண்ணம் தீட்டப்படுவதை எக்ஸ்ரே ஓவியம் என்பர். ஆலம்பாடியில் உள்ள ஓவியங்களில் பசுவின் உடலுள் குடல் தெரியும்வண்ணம் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. அதுபோன்று இங்கு மீனின் முள் தெரியும் வண்ணம் வரையப்பட்டிருத்தல்

வேண்டும் என்று கருதலாம். ஆலம்பாடி ஓவியத்தை உலோக காலத்தைச் சார்ந்தவையாகக் கருதலாம் என்பர்.[3] ஆலங்காயம்[4] மீனின் உருவமும் எக்ஸ்ரே ஓவியம் என்று கொண்டால் இதன் காலத்தையும் உலோக காலத்தை ஒட்டியதாகக் கொள்ளலாம். தமிழகப் பாறை ஓவியங்களில் செத்தவரையில் மட்டுமே மீனின் உருவம் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் இங்கு எக்ஸ்ரே முறையில் அன்றி மீனின் முழுமையான தோற்றம் காட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஆலங்காயத்தில்தான் சிறப்பான முறையில் மீனின் உருவம் தீட்டப்பட்டுள்ளது.

2. அடுத்து சில குறியீடுகள் போன்ற ஓவியங்களும் காணப்படுகின்றன. திரிசூலம், வில்அம்பு போன்ற இக்குறியீடுகள் சிவநாதபுரம், இரத்தினகிரி நெகனூர்ப்பட்டி மலை ஓவியங்களிலும் உள்ளன என்பது கருதத்தக்கது.

3. சூரியனின் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது அருகே மனித உருவம் போல் ஒரு பெருக்கல் குறியீடும், மனித உருவமும் காட்டப்பட்டுள்ளன.

4. இங்குள்ள குறிப்பிடத்தக்க ஓவியத் தொகுப்பு வரிசையாகவோ அன்றி வட்டமாகவோ மனிதர்கள் கைகோத்து நிற்பது. கோவை மாவட்டம் வேட்டைக்காரன் மலையில் இது போன்று எழுவர் கைகோத்து வரிசையாகச் செல்வது போன்ற ஓவியம் காணப்படுகிறது. அதனையடுத்து ஆலங்காயம் ஓவியங்களில்தான் காணப்படுகிறது.

5 மனித உருவம் நீண்டதொரு விலங்கின் மேல் அமர்ந்திருப்பது போன்று தீட்டப்பட்டுள்ள ஓவியத்தையும் இங்கு காண்கிறோம்.

6. இறுதியாக இங்கு கருதத்தக்கதும் சிந்தனைக்குரியதும் ஓவியங்களைச் சுற்றியும் ஆங்காங்கு வரிசையாகப் பெரிய அளவில் புள்ளிக் காணப்படுவது. இதுகாறும் கிடைத்த ஓவியங்களில் வேறெங்கும் இதுபோன்ற புள்ளிகள் உள்ளதாகத் தெரியவில்லை.

இங்குள்ள ஓவியங்கள் பல பெரிதும் அழிந்திருந்தாலும் இருப்பவை ஓவிய வரலாற்று உலகிற்குப் புதிய சேர்க்கை என்பது உறுதி

---

1. 'ஓவியமும் காவியமும்' மா. சந்திரமூர்த்தி, ஆர். வசந்த கல்யாணி, கோ. முத்துசாமி. பக். 16.
   தமிழர் நாகரிகம் (முதல் தொகுதி) தொகுப்பாசிரியர் நடன. காசிநாதன், இயக்குநர், தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை-113. 1994.

2. மேற்படி - பக். 19.

3. மேற்படி - பக். 18.

4. கள ஆய்வின் போது இக்கட்டுரை ஆசிரியரால் இவ்வோவி யங்கள் கண்டறியப்பட்டன. இக்கள ஆய்விற்குச் செல்லப் பணித்த எமது துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்களுக்கும், இப்பணியின் போது உடன் வந்து உறுதுணை புரிந்த க. வெ. சிற்றெழுத்தர் திரு. பி முருகேசன் அவர் களுக்கும், ஆலங்காயம் திரு. ராஜா அவர்களுக்கும் அழகிய முறையில் வீடியோ படம் எடுக்க உறுதுணைபுரிந்த பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்களுக்கும் வீடியோப் படம் மற்றும் நிழற்படம் எடுத்தளித்த திரு. ஸ்ரீதரன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் இந்நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# கடலில் கிடைத்த புத்தர் சிற்பம்

கா. நெடுஞ்செழியன்
காப்பாட்சியர், தரங்கம்பாடி

நாகை காயிதே மில்லத் மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் அமைந்துள்ளது சின்னமேடு என்ற ஊர். இவ்வூர் ஆக்கூர் முக்கூட்டிலிருந்து வடகிழக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர் கடற்கரையை ஒட்டிய கிராமமாகும். கரையிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள கடலில் இராமசாமி என்பவர் மீன் பிடிக்கும் போது மீன் வலையில் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட புத்தர் சிற்பம் சிக்கியது. இச்சிற்பத்தை இவ்வூர் மக்கள் கன்னிகாபரமேசுவரி கோயிலில் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

இச்சிற்பம் சாம்பல் நிறமுடைய ஒருவகைக் கல்லினால் (பளிங்குக்கல்) வடிக்கப்பட்டுள்ளது. புத்தரின் கரங்களும், பாதங்களும் உடைந்து காணப்படுகின்றன. புத்தர் நின்ற நிலையில் காணப்படுகின்றார். புத்தர் கழுத்துமுதல் கால்வரை உடை அணிந்து காணப்படுகின்றார். நீண்ட தொள்ளைக் காதுகளாலும் கீழே சரிந்து விழும் ஆடைவனப்பாலும் இவ்வுருவம் புத்தர் தான் என்று அறிந்து கொள்ள முடிகின்றது. ஏனெனில் இவ்வுருவத்தின் பெரும்பாலான பகுதிகள் கடற்பூச்சிகள் அரித்துச் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இச்சிற்பத்தின் உயரம் 57 செ.மீ. அகலம் 25 செ. மீ. ஆகும். இச்சிற்பத்தால் 2000 ஆண்டுகட்கு முன்பு இவ்வூரில் புத்தர் கோயில் இருந்தது என்பது தெரிய வருகின்றது. தற்போதும் சிற்பம் எடுக்கப்பட்ட கடற்பகுதியில் கற்கள் வலையில் சிக்குவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சங்ககாலத்தில் புத்தமதம் சிறப்புற்று விளங்கிய பூம்புகார் இவ்வூர்க் கடற்பகுதியிலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் பௌத்தப் பள்ளிகள் நாகப்பட்டினம், பூதமங்கலம், புத்தமங்கலம், போதிமங்கலம், புத்தகுடி, சங்கமங்கலம், புத்தகளூர் போன்ற இடங்களில் இருந்தமை தெரியவந்துள்ளது. தற்போது நாகை மாவட்டத்தில் சின்னமேடு கிராமத்தில் பௌத்தபள்ளி கண்டறியபட்டுள்ளது புதிய செய்தியாகும். ★

# கண்டன்விளை கல்லறைக் கல்வெட்டு

**தே. கோபாலன்**
மாவட்டத்தொல்லியல் அலுவலர், நாகர்கோயில்

கண்டன்விளையில் திங்கள் சந்தை - நாகர்கோயில் சாலையில் அலங்கார் பேக்கரிக்கு எதிரே ஒரே ஒரு அறையுடைய செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்ட சிறிய நினைவு மண்டபம் ஒன்றுள்ளது. இம்மண்டபத்திற்கு முன்பாக ஒரு குத்துக் கல்லில் கி. பி. 1702-ல் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இஃதொரு கத்தோலிக்கக் கிறித்துவ கல்லறைக் கல்வெட்டாகும்.

## கல்வெட்டின் வாசகம்

1 அளஎயஎம் ஹூ சவுட்டம்ப
2 ருமீ ஈஉ ருயஈம் ஹூ ஆனி
3 மாதம் யக உ ஞாயிற்றுக்கிளமை
4 ம காலை ய மணிக்கு நான்கூ
5 னரித் தாலுகா அச்சன்பா
6 டு மிராசு சவேரிமுத்து நா
7 டான் மகன் அருளப்பன் மர
8 ணம் இவாற்றுமத்துக்காக
9 வேண்டி கொள்ளவும்


## கல்வெட்டுச் செய்தி

அச்சன்பாடு மிராசுவான சவேரிமுத்து நாடானின் மகன் அருளப்பன் என்பவன் 3-9-1702 அன்று (தமிழுக்கு - ஆனி மாதம் 11ந் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு மரணம் அடைந்தான். அவன் ஆத்மா சாந்தியடைய வேண்டிக்கொள்வதே இக்கல்வெட்டுக் கூறும் செய்தியாகும்.

## கல்வெட்டு விளக்கம்

ஒன்பது வரிகளில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு கொல்லம் 877-ல் பொறிக்கப்பட்டுள்ளது. இது கிறித்துவாப்தத்திற்குக் கி.பி. 1702 ஆகிறது. ஆங்கில செப்டம்பர் மாதத்தினை இக்கல்வெட்டு 'சவுட்டம்பரு' எனக் குறிப்பிடுகிறது. இரண்டாவது வரியில் குறிப்பிடும் வருடம் சற்றுப் பொறிந்து போயுள்ளது. இது சக ஆண்டைக் குறிப்பிடுகிறதா அல்லது கலி ஆண்டைக் குறிப்பிடுகிறதா என அறிய இயலவில்லை. ஆங்கிலம் மற்றும் தமிழ் மாதமும் தேதியும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. 'நான்குநேரி' என்பது 'நான்கூநேரி' என நெடிலாகக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அப்போதைய நான்குநேரி வட்டம் இப்பகுதி வரை பரவி விரிந்திருந்ததற்கு இஃதோர் அரிய சான்றாகும். 'கிழமை' என்பது கல்வெட்டில் 'கிளமை' என்று எழுதப்பட்டுள்ளது. கல்வெட்டின் முடிவில் ஒரு சிலுவை பொறிக்கப்பட்டு அதனருகே 'ஒன்று' எனத் தமிழெழுத்தில் குறிக்கப்பட்டுள்ளது. சிலுவை முற்காலச் சோழர் காலத்து 'க' எழுத்தைப் போல் வெட்டப்பட்டுள்ளது. இஃதொரு கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவரின் கல்லறையாகும். இக் கல்லறைக்குச் சற்று தொலைவிலே 'புனித குழந்தை திரேசான்' எனும் கத்தோலிக்க தேவாலயம் உள்ளது. மேலும் இக்கல்வெட்டு இவனது ஆத்மா சாந்தியடைய' என்பதனை 'இவனாற்றுமத்துக் காக' எனக் குறிப்பிடுகிறது.

மேலும் கல்வெட்டு 'அச்சன்பாடு மிராசு' எனக் குறிப்பிடுகின்றது. தற்போதுள்ள கல்குளம் வட்டத்தில் அச்சன்பாடு என்ற ஊரில்லை. தற்போது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி தாலுகாவில் 'விஜய அச்சம்பாடு' என்ற ஊர் உள்ளது. இதுவே கல்வெட்டு குறிப்பிடும் 'அச்சன்பாடு' ஊராக இருக்கலாம். கல்வெட்டு குறிப்பிடும் சவேரிமுத்து இவ்வூரில் பெரிய மிராசுதாராக இருந்துள்ளதனால் மிராசு சவேரிமுத்து எனக் குறிப்பிடுகிறது. இவரது மகன் அருளப்பன் கண்டன்விளை வந்து குடியேறி இருக்கலாம் அல்லது இவ்வூர்ப் பெண்ணை மணந்து பின் இங்கு வந்து குடியேறியிருக்கலாம்.



# இரங்கல்

1981–ஆம் ஆண்டு (27-4-81) இவர் மதுரை கோவலன்பொட்டலில் காவலராகப் பணியில் அமர்த்தப் பட்ட திரு. ஆர். சமுத்திரபாண்டியன் 1951 - ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், பொருப்பு மேட்டுப்பட்டி என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் மனைவி-தனலட்சுமி, மகள்-நாகஜோதி ஆவார்.

இவரது முன்னோர் மன்னர் திருமலை நாயக்கரை வேட்டையின் போது புலியின் வாயிலிருந்து காப்பாற்றி மன்னரின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றதற்கான பட்டயத்தை மனமுவந்து மதுரை மகால் அருங்காட்சி யகத்திற்கு அன்பளிப்பாக அளித்தார்.

15 ஆண்டுப் பணியினை செவ்வனே முடித்த இவர் 1-6-96 அன்று பணியில் இருக்கும்போதே எதிர்பாராத நிலையில் இயற்கை எய்தினார். அவரது மறைவிற்கு இத்துறை ஆழ்ந்த அஞ்சலி செலுத்துகிறது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநர். திரு. நடன. காசிநாதன் அவர்கள் சார்பாக
திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலரால்
வெளியிடப் பெற்றது.